வியாழக்கிழமை 20 ஏப்ரல் 2023
தமிழருவி வார இதழ் | Tamilaruvi Weekly

# தமிழருவி


அருவி: 03 | சாரல்: 13

தமிழின் தலைநிமிர்வு




## குருட்டுத்தனமான குரங்குகளின் ஏற்றுமதி முடிவு

## நடிகர் திலகத்தோடு ஒரு பயணம்...



## அழைத்து செல்கிறார் முனைவர். கா.வெ.சே மருதுமோகன்



## நியூசிலாந்தில் வந்துதித்த இராமன்!

# கண்டி அக்குரனையில் தயார் நிலையில் இராணுவத்தினர்

## தாக்குதல் குறித்த தகவலையடுத்து நடவடிக்கை



கண்டி, அக்குரணை பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தயார் நிலையில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

இங்குள்ள பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அதிகாரிகள் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் மேலதிக பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இராணுவத்தினர் தயார் நிலையில் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதேவேளை, பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க அப்பகுதியில் இராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் குறிப்பிட்டார்.

உயிர்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்ட நான்காவது ஆண்டு நாளை நினைவுகூரப்படுவதை முன்னிட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் இந்தியத் தூதுவர் இன்று திடீர் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இன்று சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, இந்திய உயர்ஸ்தானிகர் முன்னாள் ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார்.

இலங்கையுடனான கடன் மறுசீரமைப்புக்கு இந்தியாவின் ஆதரவு உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் குறித்து இருவரும் விவாதித்தனர்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிவரும் ஆதரவுக்கு இந்தியா துணை நிற்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உறுதியளித்துள்ளார்.

மேலும், இலங்கையில் இந்திய முதலீடுகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளதாக தெரியவருகிறது.

நட்பு ரீதியிலும் சுமுகமான சூழ்நிலையிலும் நடைபெற்ற இந்தச் சந்திப்பு, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை இருதரப்பும் மீண்டும் உறுதிப்படுத்தியது.

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் சர்வதேச தரத்திற்கு இணக்கமானதாக இல்லை

### நீதி அமைச்சரிடம் அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவை இன்று சந்தித்துள்ளார். இதன்போது பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் சர்வதேச தரத்திற்கு இணக்கமானதாக இல்லை என்று தான் தெரிவித்ததாக தூதுவர் தெரிவித்தார்.

அமெரிக்க தூதுவர் தனது டுவிட்டர்பக்கத்தில் இது பற்றி பதிவு ஒன்றை இட்டுள்ளார். நீதியமைச்சருடன் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பான தனது நிலைப்பாடு குறித்து கலந்துரையாடியதாக அவர் கூறியுள்ளார். சர்வதேச தரங்களுக்கு இணங்காத பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் ஒவ்வொரு அம்சங்கள் தொடர்பாக நாங்கள் கலந்துரையாடினோம். அதேபோல் இந்த சட்டமூலம் தொடர்பில் விரிவான பொது மற்றும் நாடாளுமன்ற கலந்துரையாடல் நடப்படத்தை காண வேண்டும் என்ற எமது வலுவான அவசியம் பற்றியும் இதன் போது கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம், என அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்.

மேலும் கருத்து சுதந்திரம் அல்லது ஒன்றுக்கூடும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தாமல், பயங்கரவாதத்திற்கு எதிராக போராட பலன் தரும் கருவியாக அரசியலமைப்பு செயற்படும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சிவில் சமூகம், கல்வியாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து தரப்பினரின் கருத்துக்களை ஆராய்ந்து பார்ப்பது முக்கியமானது எனவும் அமெரிக்க தூதுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## நாளொன்றுக்கான அதிகூடிய மின்சாரத் தேவை நேற்று பதிவானது!



அண்மைக் காலங்களில் இலங்கையின் நாளொன்றுக்கான அதிகூடிய மின்சாரத் தேவை நேற்று (19) பதிவானதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம், தேவைக்கு ஏற்ப நிகர மின் உற்பத்தி 49.53GWh பதிவானதாக இன்று (20) டுவிட்டரில் பதிவில் அமைச்சர் குறிப்பிட்டார். இதற்கிடையில், இன்று காலை பதிவு செய்யப்பட்ட தேவையின்படி, இன்று மின் உற்பத்தி 50 எனிட தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, அண்மையில் நிறுவப்பட்ட ஹம்பாந்தோட்டை, டீசலில் இயங்கும் மின்பிறப்பாக்கிகள் உட்பட இலங்கை மின்சார சபையின் அனைத்து அனல் நிலையங்களும் மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

## நீண்ட காலத்தின் பின்னர் யாழில் கோரோனா மரணம்



யாழில் கொரோணா காரணமாக பாதிக்கப்பட்டு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒருவர் நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நீர்வேலிப் பகுதியில் கொரோணாவால் பாதிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்ட முதியவர் ஒருவர் கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட முதியவர் மூச்சுத் திணறலுக்கு உட்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடலம் மூடிச் சீல் வைக்கப்பட்டு உறவுகளிடம் ஒப்படைக்கப்படவுள்ள தோடு சடங்குகளிற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது எனத் தெரியவருகின்றது.

# தலைபிறையைத் தீர்மானிக்கும் மாநாடு நாளை!

ஷவ்வால் மாத தலைபிறையைத் தீர்மானிக்கும் மாநாடு நாளை (21) இடம்பெறவுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

நாளை மஹ்ரிப் தொழுகையின் பின்னர் தலைபிறையைத் தீர்மானிக்கும் மாநாடு இடம்பெறவுள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

புனித ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்ற முஸ்லிம் மக்கள் ஷவ்வால் மாத தலைபிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடவுள்ளனர்.






செய்தி:-

பயிர்களுக்கு அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தியவர் பட்டியலில் குரங்குகளை விட கோத்தாபய ராஜபக்ஷவே முதலிடம் பெறுவார். எனவே அவரையும் எங்கேயாவது ஏற்றுமதி செய்ய வேண்டும்.

**சுற்றுச்சூழல் ஆர்வலர் நயனரக ரன்வெல**

அவரோட கூடயிருந்து
கும்பியடிச்சதுகள எங்க அனுப்புற?

# கிளிநொச்சியில் விழுதுகள் அமைப்பின் 5 வது இலவச மருத்துவ முகாம்!





கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் 2016 ம் ஆண்டு உயர்தர மாணவர்கள் வித்தியாலயத்தின் விழுதுகள் 2016 அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிறன்று கிளிநொச்சி வன்னேரிக்குளம் யோகசுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் நடைபெற்ற இவ் இலவச மருத்து முகாமில் முதியோர் இல்ல முதியோர்கள் மற்றும் பிரதேச வாழ் மக்கள் அடங்கலாக 313 பேர் கலந்து கொண்டு சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டதுடன் கண்கள் பரிசோதிக்கப்பட்டு 39 வாசிப்புக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

இவ் இலவச மருத்துவமுகாமில் கண்சிகிச்சை, பற்சிகிச்சை, வெளி நோயாளர்பிரிவு, பெண்களுக்கான கருப்பை கழுத்துப் பரிசோதனை ,மார்பக புற்றுநோய் பரிசோதனை, மந்த போசணையுடைய குழந்தைகளுக்கான சிகிச்சைகள் ,ஆலோசனைகள் ,மலேரியா இரத்த பரிசோதனை, உளநல ஆலோசனைகள் ,சட்ட ஆ லோசனைகள் என்பன இடம்பெற்றன் கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிபனையினரும் கிளிநொச்சி மற்றும் அக்கராயன் வைத்தியசாலை மருத்துவர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், மருத்துவமாதுக்கள் என மருத்துவ குழாமினரும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வித்தியாலயத்தின் விழுதுகள் அ மைப்பினருடன் இணைந்து பணியாற்றி கிராம வாழ் மக்களுக்கும், முதியோர்களுக்கும் பயனுடைய சேவையாற்றியிருந்தனர் .

# MOP உரத்தின் விலையை 4500 ரூபாவால் குறைக்கத் தீர்மானம்!



இந்த வருடம் நெற்செய்கைக்கான MOP உரத்தின் விலையை 4500 ரூபாவால் குறைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் தற்போது சந்தையில் MOP உரத்தின் 50 கிலோகிராம் மூடை 18,500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் அந்தத் தொகையை விவசாயிகளுக்கு ஏற்க சிரமமாக இருப்பதால் விலையைக் குறைக்கத் தீர்மானித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி அடுத்த வாரம் கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

குறைந்த விலையில் உரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் செயற்பட்டு வருவதால் இரசாயன உர விற்பனை தொடர்பில் சந்தையில் போட்டி உருவாகியுள்ளதோடு இதன் மூலம் விவசாயிகள் பயனடைவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, யூரியா உரத்தின் விலை குறைவடைந்துள்ளதால் எதிர்காலத்தில் கூகுக மற்றும் ஷுங்ஷக ஆகிய உரங்களின் விலை மேலும் குறையும் எனத் தனியார் துறை உர விற்பனையாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம்

## மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்!




அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்பட்ட உள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அவசியமற்றது என்பதை வலியுறுத்தி வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் நகர சுற்று வட்ட பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் பிரதிநிதிகளுடன் மன்னார் மாவட்ட பெண்கள் இணைந்து குறித்த கவனயீர்ப்பு நிகழ்வை முன்னெடுத்தனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அவசியமற்றது என்பதை வலியுறுத்தி குறித்த பெண்கள் அமைப்பினரால் கவன ஈர்ப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு நிகழ்வு குறித்த நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டது. மன்னாரில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வில் சுமார் 200 பேர் வரை கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உடனடியாக நிறுத்த கோரி குறித்த பெண்கள் அமைப்பினரால் அறிக்கை ஒன்றும் மக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டமை கூறிப்பிடத்தக்கது

# தங்கத்தின் விலையில் வீழ்ச்சி!

கடந்த சில தினங்களாக நாட்டில் தங்கத்தின் விலையானது ஏற்ற இறக்கங்களுடன் பதிவாகி வருகின்றது.

அந்தவகையில், இன்றையதினம் (20) தங்கத்தின் விலையானது சற்று வீழ்ச்சி கண்டுள்ளது.

இன்றைய தங்க விற்பனை நிலவரப்படி, ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலையானது 640,592 ரூபாவாக காணப்படுகின்றது.

இந்த நிலையில், 24 கரட் தங்கப் பவுண் ஒன்று இன்றைய தினம் 180,800 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதேபோல 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 165,750 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன் 21 கரட் தங்கப் பவுண் ஒன்று 158,200 ரூபாவாக இன்றைய தினம் பதிவாகியுள்ளது.

எனினும், ஆபரணத் தங்கத்தின் விலை இந்த விலைகளில் இருந்து மாற்றம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## மே மாத முடிவு வரை பேயாடும் ஆதவனே!

நாட்டில் தற்போது நிலவி வரும் அதிக வெப்பநிலையானது எதிர்வரும் மே மாதத்தின் இறுதி வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, அதிக வெப்பம் காரணமாக வெப்ப பக்கவாதம் (Heat Stroke) ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதாக வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன்படி, நண்பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரையிலான நேரத்தை மிகவும் கவனமாக செலவிடுமாறு அவர்கள் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் சேனக கமகே ,

இந்த நாட்களில், இந்த கடுமையான வெப்ப நிலை உடலுக்கு மிகவும் மோசமானது, ஒருவரது உள் உடல் வெப்பநிலை 40 செல்சியஸ் அல்லது அதனை விட அதிகமாக காணப்படின் அது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமையாக கருதப்படுகிறது. இதன் மூலம் இதயம் மூளை, சிறுநீரகம் மற்றும் நரம்பு மண்டலத்திற்கு ஆபத்து அதிகமாக காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இது அதிகமாக சர்க்கரை வியாதி மற்றும் புற்று நோய் போன்ற நோயாளர்களும் வீதியோரங்களில் வேலை செய்பவர்கள், பொலிஸார் அதிக கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த இந்த தினங்களில் சித்திரை புத்தாண்டு கொண்டாட்டங்கள் அதிகளவில் இடம்பெற்று வருவதால் வெளிப்பிரதேசங்களில் நடத்தும் விளையாட்டுக்களை காலை வேளையில் நடத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிர் நிற ஆடைகளை அணிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதோடு, சுத்தமான நீரைப் பருகவும் , சராசரியாக 2 லீட்டர் அளவில் நீரைப் பருகவும், குளிர்ப் பானங்களை தவிர்க்குமாறும் அதற்குப் பதிலாக இளநீர் மற்றும் மூலிகை பானங்களை அருந்துமாறும், அதிகளவில் வெளியே செல்வதை தவிர்க்குமாறும் அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அதிக வெப்பத்தினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தவிர்ப்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டுமென ரிட்ஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.


அதன்படி, அதிக திரவங்களை அருந்துவது வெப்பமான காலநிலையிலிருந்து சிக்கல்களைக் குறைக்க உதவும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**சுகாதார தரப்பினர் சொல்லாமல் போன செய்தியோன்று வாசகர்களுக்கு காத்திருக்கிறது அது உங்கள் வளர்ப்பு பிராணிகளுக்கு போதுமான நீர் அருந்தவும் நீராடவும் கிடைப்பதை உறுதிப்படுத்துங்கள். குறிப்பாக நாய்களிடையே ஏற்படும் நீர்வெறுப்பு நோய் ஆபத்தை விளைவிப்பதுடன் விசர் நாய்க் கடிக்கான மருந்துகளின் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது.**



## குருட்டுத்தனமான குரங்குகளின் ஏற்றுமதி முடிவு

**பவித்திரா**



குரங்குகளினால் விவசாயத்தில் ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு இலங்கையிலிருந்து ஒரு இலட்சம் செங்குரங்குகளைச் சீனாவின் மிருகக்காட்சிச் சாலைகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானித்திருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்ததையடுத்துப் பலத்த வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து, கொழும்பு சீனத்தூதுவராலயம் இவ்வாறானதொரு கோரிக்கையைத் தாம் முன்வைக்கவில்லையெனத் தற்போது அறிவித்துள்ளது. சீனாவின் தனியார் விலங்குப் பண்ணையொன்றின் எழுத்துமூல கோரிக்கையின் அடிப்படையில் ஏற்றுமதி முடிவெடுத்த விவசாய அமைச்சும் சுருதி இறங்கி முதற்கட்டமாக ஐந்நூறு குரங்குகளை அனுப்ப இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இம்முடிவு குருட்டுத்தனமானதும் சூழல் விரோதமானதும் நடைமுறைச் சாத்தியம் இல்லாததும் ஆகும் .

அழிந்துவரும் காட்டுயிரிகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் சர்வதேச உடன்படிக்கையைச் சீனா ஏற்றுக் கொண்டிருப்பதால் குரங்குகளின் இறக்குமதிக்கு அனுமதி இல்லை என்றும் சீனத் தூதுவராலயம் தெரிவித்திருக்கிறது. ஆனால், சட்டபூர்வமான அனுமதி இல்லாத நிலையிலும்;குரங்குகள் உட்பட அழிந்துவரும் பல காட்டுயிரிகளின் மிகப்பெரும் கறுப்புச்சந்தையாக இன்றளவும் சீனாவே இயங்கி வருகிறது.

சீன உணவகங்களில் குரங்கிறைச்சி அதிவிருப்பத்திற்குரிய தெரிவு என்பதாலும் ஆய்வகங்களில் குரங்குகள் சோதனை விலங்குகளாக அதிகம் தேவைப்படுவதாலும் சீனாவில் குரங்குகளுக்கான தட்டுப்பாடு எப்போதுமே நிலவுகிறது. இதனை ஈடுகட்டவே, ஜீவகாருண்யர்களின் தண்டனைகளில் இருந்து தப்ப மிருகக்காட்சிச் சாலைகளுக்கென்ற பெயரில் குரங்குகளின் வர்த்தகத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**குரங்குகளால் பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால், கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக, பின்நோக்கிச் சுடுவது போன்று பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.**



பொ.ஐங்கரநேசன்
தலைவர்
தமிழ்த்தேசிய பசுமை இயக்கம்

குரங்குகளால் பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால், கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக, பின்நோக்கிச் சுடுவது போன்று பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

குரங்குகள் தமது உணவு முறையால் காட்டுவெளியெங்கும் விதைகளைத் தூவி மரங்களை இயற்கையாகவே நடவுசெய்கின்றன. இதனால், காடுகளின் கட்டுமானத்தில் மையக்கல் இனங்களாகக் (key stone species) கருதப்படும் இக்குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி இயற்கைச்சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற்றங்கள் விரைவுபடுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும்.


செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது. சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்நிலையில் எதனையுமே விற்று டொலர்களாக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் நடைமுறைச்சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். கூடவே, குரங்குகளினால் விவசாயத்துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையொன்றையும் விரைந்து நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் .

# சுவிஸில் 67 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட டைனோசரஸ் ரெக்ஸ்!

## 6 மில்லியன் டொலர்களுக்கு ஏலம் போனது






சுவிட்சர்லாந்தில் 67 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசரின் எலும்புக்கூடு 6.11 மில்லியன் அமேரிக்க டொலர்களுக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

67 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசர்களின் எலும்புக்கூடுகள் புதைபடிமங்களாக, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அமெரிக்காவில் உள்ள 3 புதைபடிம ஆய்வு தளங்களில் இருந்து டைனோசரின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.

67 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டிரனாசோரஸ் ரெக்ஸ் என்ற வகையைச் சேர்ந்த அந்த டைனோசரின் சுமார் 300 எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.

சுவிஸில் ஏலம் அவை அனைத்தும் மொத்தமாக ஒரே எலும்புக்கூடாக சேர்க்கப்பட்டு, தற்போது சுவிட்சர்லாந்தில் ஏலத்தில் விடப்பட்டுள்ளது. இதற்கு 'டிரினிட்டி' என பெயரிடப்பட்டுள்ள நிலையில், இதன் நீளம் 11.6 மீற்றர், உயரம் 3.9 மீற்றர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு தனியார் பழம்பொருள் சேகரிப்பாளர் 6.11 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இதனை ஏலத்தில் வாங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதார நெருக்கடியில் திணறும் பாகிஸ்தான்!

பாகிஸ்தான் நாடு, பொருளாதார நெருக்கடியில் சிக்கி திணறி வருகிறது. இதனால் பெட்ரோல், டீசல், அத்தியாவசிய பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் கடுமையாக உயர்ந்து உள்ளன.

கோதுமைக்கு தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் தவிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். பாகிஸ்தானிடம் அன்னிய செலாவணி இருப்பு குறைந்து வருவதால் அந்நாட்டு அரசு பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் திணறுகிறது.

இதனால் பாகிஸ்தானில் பெட்ரோலிய பொருட்களின் விலை அடிக்கடி உயர்த்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானில் பெட்ரோல் விலை மீண்டும் உயர்த்தப்படுகிறது. அடுத்த 15 நாட்களுக்குள் பெட்ரோல் விலையை ரூ.10 முதல் ரூ.14 வரை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளதாக நிதி மந்திரி இஷாக்தார் தெரிவித்துள்ளார். சர்வதேசசந்தையில் பெட்ரோலிய செலவுகள் அதிகரிப்பு மற்றும் நாணய விகித மாறுபாடு ஆகியவை காரணமாக பெட்ரோலிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பெட்ரோல் லிட்டருக்கு ரூ.14.77 அதிகரித்து ரூ.286.77-க்கு விற்கப்படுகிறது. அதே போல் மண்ணெண்ணெய் லிட்டருக்கு ரூ.5.78 உயர்த்தப்பட்டு ரூ.186.07-க்கு விற்கிறது.

அதே வேளையில் டீசல் விலை உயர்த்தப்படவில்லை. டீசல் லிட்டர் ரூ.293-க்கும், லைட் டீசல் ரூ.174.68-க்கும் விற்பனை ஆகிறது.

இந்த விலை உயர்வு இன்று முதல் அமலுக்கு வந்தது. பாகிஸ்தானில் பணவீக்கம் மிகவும் மோசமாக உள்ளது. கடந்த மாதம் பணவீக்கம் 35 சதவீதமாக இருந்தது.

# இந்தியப்பெண்மணிக்கு ஜப்பானில் கௌரவ விருது!




டோக்கியோவில் உள்ள டாண்டியா மஸ்தி ஒருவரைக் காப்பாற்றியதற்காக ஜப்பானின் ஜோடோ தீயணைப்பு நிலையத்தால் இந்தியப் பெண்மணியான தீபாலி ஜாவேரிக்கு விருது வழங்கப்பட்டது.

அதனை வரவேற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

குறித்த விருது தொடர்பில் தெரிந்துகொள்வது மகிழ்ச்சி அளிக்கிறது, மேலும் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் சரியான நேரத்தில் உதவி வழங்குவதன் முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் உள்ள இந்தியத் தூதரகமானது, 'ஜப்பானில் வசிக்கும் இந்தியரான திருமதி தீபாலி ஜாவேரி மற்றும் ஒட்டா ஆகியோர் கடந்த ஒக்டோபரில் டோக்கியோவில் உள்ள டாண்டியா மஸ்தி ஒருவரை காப்பாற்றியதற்காக ஜோட்டோ தீயணைப்பு நிலையத்தால் விருதுகள் வழங்கப்பட்டன.

2022 இல் ஜப்பானில் நவராத்திரியின் கர்பா நிகழ்வின் போது ஒரு நபரின் இதயத் துடிப்பு திடீரென நின்றது.

இருப்பினும், கர்பா நடனமாட வந்த தீபாலி ஜாவேரி, உடனடியாக உயிர்காக்கும் நடவடிக்கைகளைச் செய்து அவரது உயிரைக் காப்பாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விசாரணையை எதிர்கொள்கிறார் ரிஷி சுனக்!



அரசு பணத்தில் நன்மை பெறும் அமைப்பு ஒன்றுடன் தனது மனைவிக்கு தொடர்பு இருப்பதை பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் மறைத்ததாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து பிரதமர் ரிஷி விசாரணைக்குட்படுத்தப்பட இருக்கிறார்.

சமீபத்தில், பிரித்தானிய அரசின் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அதில், குழந்தைகள் நலன் அமைப்புகளுக்கான உதவித்தொகை, சில நிபந்தனைகளுக்கு உட்படும் நிலையில் இரட்டிப்பாக்கப்படுவதாக அறிவித்திருந்தார் சான்சிலர் ஜெரமி ஹண்ட்.

பிரதமர் ரிஷியின் மனைவியான அக்‌ஷதா மூர்த்தி, குழந்தைகள் நல அமைப்பான கொரு கிட்ஸ் என்னும் அமைப்பில் பங்குதாரராக உள்ளார். ஆகவே, பிரதமர் அறிவித்த சலுகை ஒன்றின் மூலம், அவரது குடும்பத்துக்கே கூடுதல் இலாபம் கிடைக்கிறதா என்பதைக் குறித்து ரிஷி பதிலளிக்கவேண்டுமெனலிபரல் டெமாக்ரட்ஸ் கட்சியின் துணை தலைவரான வெண்டி சாம்பர்லின் கோரியிருந்தார். இது குறித்து பிரதமரின் ஆலோசகரான சேர் வவுறி மக்னஸ் விசாரணை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியிருந்தார். அத்துடன், லேபர் கட்சியினரும் இது குறித்துக் கேள்வி எழுப்பினார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொருத்தவரை, அவர்கள் தங்கள் சொத்துக்கள் குறித்த விடயங்களை வெளிப்படையாக தெரிவிக்கவேண்டும், எதையும் மறைக்கக்கூடாது என விதி உள்ளது. அப்படி இருக்கும்போது, பிரதமர் ரிஷியின் மனைவியான அக்‌ஷதா மூர்த்தி, குழந்தைகள் நல அமைப்பான கோரு கிட்ஸ் என்னும் அமைப்பில் பங்குதாரராக உள்ளது தொடர்பான விடயங்களை ரிஷி மறைத்தாரா என்பது குறித்து கேள்வி எழுந்துள்ளதால், அது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட உள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தர நிலைகளுக்கான ஆணையரான டானியல் பேர்க் இந்த விசாரணையை மேற்கொள்ள இருக்கிறார். பிரதமர் ரிஷி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்கள் குறித்த விடயங்கள் எதையும் மறைக்கக்கூடாது என்னும் விதி உட்பட விதிகள் எவற்றையாவது மீறினாரா என்பது குறித்து டானியல் கிறீன் பேர்க் விசாரணை மேற்கொள்ள இருக்கிறார்.

தான் பிரதமரானதும், சீட் பெல்ட் அணியாவிட்டால் அபராதம் விதிக்கப்படும், முந்தைய பிரதமர் போரிஸ் ஜான்சன் நடத்திய பார்ட்டியில் விதிகளை மீறி பங்கேற்றவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும், ஆக, அரசை மீண்டும் ஒழுக்க நெறிமுறைகளுக்குட்பட்டதாக மாற்றுவேன் என ரிஷி சூளுரைத்திருந்த நிலையில், அவரே தன் மனைவிக்கு அரசு பணத்தில் நன்மை கிடைப்பது தொடர்பிலான ஒரு விடயத்தை மறைத்ததாக விசாரணைக்குட்படுத்தப்பட இருப்பதால், பெரும் தலைக்குனிவை சந்திக்கும் நிலைமைக்கு ஆளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.க. பொதுச்செயலாளராக

# அங்கீகரித்தது தேர்தல் ஆணையம்!



எடப்பாடி பழனிசாமியை அதிமுகவின் பொதுச்செயலாளராக இந்தியத் தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது.

எடப்பாடி பழனிசாமி கர்நாடகா மாநிலத்தில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி அணிக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க கர்நாடகா மாநில தலைமைத் தேர்தல் ஆணையருக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் கடிதம் எழுதியுள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை 11-ம் தேதி நடைபெற்ற அ.தி.மு.க பொதுக்குழுக் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எதிராக ஓ.பன்னீர் செல்வம் தரப்பில் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

அந்த வழக்குகளில் எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லும் என்று உத்தரவிடப்பட்டது. இருப்பினும், எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது தொடர்பான வழக்கு சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இதற்கிடையில், எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதை இந்தியத் தேர்தல் ஆணையம் அங்கீகரிக்காமல் இருந்து வந்தது. தேர்தல் ஆணையத்தில் இணை ஒருங்கிணைப்பாளர் என்றே குறிப்பிடப்பட்டு வந்தது.




## ரஷ்ய வர்த்தக மற்றும் தொழில் துறை அலுவலகம் புதுடில்லியில் திறப்பு

வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன், ரஷ்ய வர்த்தகம் மற்றும் தொழில்துறை, அலுவலகம் புதுடில்லியில் திறக்கப்பட்டுள்ளது.




இந்தியாவிற்கான வணிகப் பணியின் ஒரு பகுதியாக, ரஷ்ய கூட்டமைப்பின் வர்த்தக மற்றும் தொழில்துறை வர்த்தக கழகத்தின் தலைவர் செர்ஜி கேத்ரின் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

அவர், இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் ஷாலேஷ் படக்கை சந்தித்து, பேச்சவார்த்தைகளையும் நடத்தினார்.

அவர் தனது உரையில், ரஷ்ய கூட்டமைப்பின் வர்த்தக மற்றும் தொழில் துறைக் கட்டமைப்பின் தலைமைக்கு நன்றி. ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்டமைப்பானது, அதன் அளவு, பிரதிநிதித்துவ நிலை மற்றும் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் காணப்படுகின்றது.

கடந்த 14 ஆண்டுகளில் எங்கள் கூட்டு நிகழ்வுகளின் நிகழ்ச்சி நிரலில் மிகப்பெரிய வணிக நோக்கம், ரஷ்ய கூட்டமைப்பின் வர்த்தக மற்றும் தொழில்துறை ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தானமை தான்.

2022ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான வர்த்தகம் சாதனைகளை முறியடித்து வருகிறது.

இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பர வர்த்தகம் 35.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதோடு, இந்த நிலைமையானது 2021 ஆண்டின் சாதனையை விட 2.5 மடங்கு அதிகமாகும். செர்ஜி கேடிரின், பொருளாதார உறவுகளின் ஊடான இத்தகைய விரைவான வளர்ச்சியானது உலகளாவிய வெளிநாட்டு பொருளாதார சூழலில் ஏற்படும் மாற்றங்களால் பெரிதும் எளிதாக்கப்படுகிறது.

மறுபுறம், இந்தியா பாரம்பரியமாக ரஷ்யாவின் முக்கிய மூலோபாய வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

இதனால் பலதரப்பு வடிவங்களிலும் வணிக தொடர்புகள் உருவாகி வருகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் வணிகர் கழகத்தின், இந்தியாவுடனான வணிக ஒத்துழைப்பை மேம்படுத்துவது சர்வதேச நடவடிக்கைகளின் முன்னுரிமைப் பகுதிகளில் ஒன்றாகும்.

ரஷ்யாவின் தலைவர், 2006 முதல், ரஷ்யாக் கூட்டமைப்பு இந்தியாவுடனான ஒத்துழைப்புக்கான வணிக தரப்புடன் தீவிரமாக செயல்பட்டு வருவதாக நினைவு கூர்ந்தார்.

இது சந்தைகளில் ரஷ்ய மட்டுமல்ல, இந்திய தொழில்முனைவோரின் நலன்களை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழிமுறையாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### தமிழகத்தில் மீண்டும்

# தலைவிரிக்கும் கொரோனா தொற்று

### இருவர் பலி!

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக கொரோனா பாதிப்பு படிப்படியாக அதிகரித்து வருகிறது. அதன்படி இன்றும் கொரோனா பாதிப்பு 500யை கடந்த நிலையில் 2 பேர் பலியாகி உள்ளனர். குறிப்பாக சென்னை, கோவை, கன்னியாகுமரி, திருப்பூர், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் கொரோனா பாதிப்பு உயர்ந்து வருகிறது.



தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக கொரோனா பாதிப்பு என்பது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் கூட்ட நெரிசல் அதிகம் உள்ள இடங்களை தவிர்க்க வேண்டும் எனவும், மேலும் மருத்துவமனைகளில் மாஸ்க் அணிய வேண்டும் வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது .

அதோடு கொரோனா பாதிப்பு என்பது மெல்ல மெல்ல உயர தொடங்குவதால் பொதுமக்கள் அலட்சியம் காட்டாமல் தற்காப்பு நடவடிக்கையாக மாஸ்க் அணிதல், கைகளை சுத்தமாக கழுவுதல் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கையை முறையாக பின்பற்ற வேண்டும் எனவும் அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தான் தமிழ்நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் ஏற்பட்ட கொரோனா பாதிப்பு குறித்த விபரங்களை தமிழ்நாடு சுகாதாரத்துறை வெளியிட்டுள்ளது. அதன்படி இன்று ஒரேநாளில் தமிழ்நாட்டில் கொரோனாவால் 542 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 283 பேர் ஆண்களாகவும், 259 பேர் பெண்களாகவும் உள்ளனர்.

தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் அதிகபட்ச பாதிப்பு என்பது சென்னையில் பதிவாகி உள்ளது. சென்னையில் மட்டும் இன்று 116 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தப்படியாக கோவையில் 75 பேரும், கன்னியாகுமரியில் 35 பேரும், திருப்பூரில் 28 பேரும், சேலத்தில் 27 பேரும், திருவள்ளூரில் 26 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்கள் உள்பட மொத்தம் 36 மாவட்டங்களில் பாதிப்புகள் பதிவாகி உள்ளன. இதன்மூலம் தமிழ்நாட்டில் கொரோனா பாதித்தோரின் எண்ணிக்கை என்பது 3,564 ஆக அதிகரித்துள்ளது. இவர்கள் வீடுகளிலும், மருத்துவமனைகளிலும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையுடன் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இந்த எண்ணிக்கை நேற்று 3,455 என்ற அளவில் இருந்த நிலையில் இன்று உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 2 பேர் கொரோனாவால் பலியாகி உள்ளனர். அதன்படி சென்னையில் ஒருவரும், காஞ்சிபுரத்தில் ஒருவரும் பலியாகி உள்ளனர். மேலும் கடந்த 24 மணிநேரத்தில் 432 பேர் கொரோனாவில் இருந்து மீண்டுள்ளனர். என தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள சுகாதாரத்துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மயிலாடு துறையில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஐம்பொன் சிலைகளும் தேவார செப்பேடுகளும் கண்டுபிடிப்பு!

மயிலாடுதுறை அருகே சட்டைநாதர் கோயிலில் கும்பாபிஷேக பணிக்காக குழி தோண்டிய போது 23 ஐம்பொன் சிலைகள், 462 தேவார செப்பேடுகள் கண்டெடுக்கப்பட்டன.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தருமபுர ஆதீனத்திற்கு சொந்தமான வரலாற்று சிறப்புமிக்க சட்டைநாதர் கோயிலில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு கும்பாபிஷேகத்துக்கான பணிகள் நடந்து வருகிறது.

இந்நிலையில், யாகசாலை அமைப்பதற்காக மண் எடுக்க மேற்கு கோபுர வாயிலில் கோயில் உட்புறத்தில் பொக்லைன் இயந்திரம் மூலம் நேற்று மதியம் 2 மணியளவில் குழிதோண்டப்பட்டது.

அப்போது, 2 அடியில் புதைந்திருந்த ஐம்பொன் சிலைகளான விநாயகர், முருகர், வள்ளி, தெய்வானை, சோமஸ்கந்தர், அம்பாள், பூர்ண புஷ்கலா அய்யனார், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் உள்ளிட்ட அரை முதல் 2 அடி வரை உள்ள 23 ஐம்பொன் சிலைகள் கண்டெடுக்கப்பட்டது. இதுதவிர திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற 462 தேவார செப்பேடுகள் கண்டெடுக்கப்பட்டது.



அதனை தருமபுர ஆதீனம் 27வது குருமகா சன்னிதானம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நேரில் பார்வையிட்டு எந்த காலத்துக்குரிய சிலைகள் என ஆய்வு செய்தார்.

தகவலறிந்த மயிலாடுதுறை இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் மோகனசுந்தரம், தொல்லியல் துறை மண்டல ஆலோசகர்கள், சீர்காழி நகர மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ஆகியோர் கோயிலுக்கு வந்து பார்வையிட்டனர். சட்டை நாதர் கோயில் சிலையா? அல்லது வேறு கோயிலில் இருந்து சிலைகள் கொண்டு வந்து இங்கு புதைக்கப்பட்டதா? என ஆய்வு செய்தனர். இதுவரை எங்கும் கிடைக்காத வகையில் ஒரே இடத்தில் 23 ஐம்பொன் சிலைகள் கண்டெடுக்கப்பட்டதால் சீர்காழி பொதுமக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனை அனைவரும் ஆர்வத்துடன் வந்து பார்த்து சென்றனர். இதன் மதிப்பு பல கோடி ரூபாய் இருக்கலாம் என கூறப்படுகிறது. 1,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிலைகள் எனவும், 13ம் நூற்றாண்டை சேர்ந்த சோழர் காலத்து சிலைகள் எனவும் தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.



# காய்கறிகளின் சலட்

# கைக்கெட்டிய அருமருந்து




பிரமிளா நாகேஸ்வரராஜா




**எல்லோரும்** தான் சாப்பிடுகிறார்கள் ஆனால், ஆரோக்கியமாக சாப்பிடுவது கொஞ்சப் பேர் மட்டுமே அதிலும் நாம் தினம் சாப்பிடும் சாப்பாட்டில் கூட ஏகப்பட்ட ‘பிடிக்கும்’, ‘பிடிக்காதது’ வைத்திருப்போம்.

எதை எப்போது, எப்படி, எவ்வளவு, சாப்பிட வேண்டும் என்பதை அறிந்து சாப்பிட்டால் எப்போதும் பிரச்சனை இல்லை. இன்றைக்கு மாறி வரும் உணவு முறையால் உடற்பருமன், இதயநோய், சர்க்கரைநோய் போன்றவற்றை நாமே உருவாக்கிக் கொள்கிறோம். உடற்பருமனை குறைத்தாலே பல நோய்கள் எமை அண்டாது.

உணவின் இயற்கை குணங்கள், உணவுப் பொருட்களின் கலவை, உணவைத் தயாரிக்கும் முறை, உணவின் அளவு, அந்த உணவு விளையும் பிரதேசம், உணவை சாப்பிடும் பருவம் ஆகியவற்றை பொறுத்து அந்த உணவு அதைச் சாப்பிடுகிறவருக்கு ஊட்டத்தையும், மாற்றத்தையும் தரும் என கணித்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். ஆரோக்கியமான உணவு நமக்கு அருகிலும், சுற்றிலும் உள்ளது. நாம் அதை அங்கீகரிக்க வேண்டும்.





## நமக்கு அருகில் உள்ள ஆரோக்கியமான உணவு

உணவில்லாமல் உயிர் வாழ்வது இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இன்னமும் உணவு தான் நம் ஊனாய், உணர்வாய் மாறி உயிர் கொடுக்குது. மனதுக்கு பிடிக்காமல் எதையும் சாப்பிடக் கூடாது.உடலுக்கு நல்லம் என்றால் அதை மனமுவந்து சாப்பிடுகிற மாதிரி மனதை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். நம் உடலுக்குள் நுழையும் எந்த ஒரு பொருளும் ஏதோ ஒரு விளைவை ஏற்படுத்துகிறது. அது நல்ல உணவாக இருந்தால் உடல் ஊட்டம் பெறுகிறது, அது மருந்தாக இருந்தால் நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது.

நாம் உண்ணும் உணவானது சத்து, சுவை, மணம் மட்டுமன்றி பார்ப்பவரை சாப்பிடத் தூண்டும் அளவிற்கு அழகாகவும் இருப்பது அவசியம்.

## கையளவு காய்கறிகளிலிருந்து சாலட்

சாலட் என்பது சமைக்கப்படாத பல வகை உணவுப் பொருட்களின் கலவை ஆகும். எப்போதும் அவற்றின் ஆரோக்கிய நன்மைகளுக்காக அறியப்படுகின்றன. சாலட் செய்ய பயன்படுத்தும் காய்கறிகளில் புரோக்கோலி, முட்டைகோஸ், கரட், காலிப்ளவர்,செலரி, வெள்ளரிக்காய், சோள முத்துக்கள், பேபி கார்ன், வெங்காயம், தக்காளி, பட்டாணி, சிறு கீரை, காளான், குடைமிளகாய், முள்ளங்கி, பீட்ரூட் ஆகியவை மிகவும் பிரபலமானவை. இவை தவிர சாலட்டிற்கு சுவை சேர்ப்பதற்காக நிலக்கடலை போன்ற நட்ஸ்கள், உலர்ந்த பழங்கள், முழுத் தானியங்கள், பீன்ஸ் மற்றும் பருப்பு வகைகள், புதிய பழங்கள், பாலாடைக் கட்டிகள் போன்றவையும் ஆரோக்கியமான சேர்க்கைகளாக பயன்படுத்தப்படுகின்றன. இந்த சாலட் உங்களுக்கு தேவையான வைட்டமின்கள் ஏ, ஹீமோகுளோபின்,



பீட்டா கரோட்டின் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்களை வழங்கி நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்க வைக்கும். சாலட் செய்யும் போது மரக்கறிகளை மிக மெல்லியதாக பல வடிவங்களில் வெட்டினால் பார்க்க மிகவும் அழகாக இருக்கும். இடை நேர பசிக்கு சிறப்பான ஒரு எளிய உணவு. மிக எளிதாக எல்லோராலும் செய்யக் கூடியது.

மன ஆரோக்கியத்திற்கும் உடல் நலனுக்கும் ஏற்ற சூப்பர் சாலடுகள் சமைக்க வேண்டாம் அப்படியே சாப்பிடலாம். இந்த வகையான சாலட் உணவு இப்போது மிகவும் பிரபலமாகி விட்டது. உணவகங்களிலும், விருந்துகளிலும் வித விதமான சாலட்கள் பரிமாறுவது வழக்கமாகி விட்டது. காய்கறிகள்,பழங்களின் சத்துகள் அப்படியே கிடைப்பதால் உடல் ஆரோக்கியத்துக்கு சாலட்கள் மிகவும் உறுதுணை புரிகின்றன. டயட்டில் உள்ளவர்களுக்கு இவை வரப்பிரசாதமாக விளங்குகின்றன.

மேலும் வாய்க்கு ருசியாகவும், வயிற்றுக்கு இதமாகவும் இருக்கும் இவற்றை குறிப்பாக இளம் பருவத்தினர் விரும்பிச் சாப்பிடுகின்றனர்.

## இந்த வார சமையல் குறிப்பு

### ஸ்ப்ரவுட்ஸ் சாலட்

### தேவையானவை

**முளை கட்டிய பச்சைப் பயறு - 1 கப்**
**அவித்த சர்க்கரைவள்ளிக்கிழங்கு -1**
**வேக வைத்த வேர்கடலை - 1/2 கப்**
**துருவிய கரட் - 1**
**துருவிய மாங்காய் - 1/2 கப்**
**பெரிய வெங்காயம் -1**
**பச்சை மிளகாய் - 1**
**சிறு துண்டு இஞ்சி - 1**
**தோல் நீக்கி அவித்த சிறிய பீட்ரூட் -1**
**செத்தல் மிளகாய் வெட்டுத்தூள் - 1தே.க**
**எலுமிச்சை சாறு - 1மே.க**
**உப்பு - சுவைக்கேற்ப**

### செய்முறை


வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி அவித்த சீனிக்கிழங்கை சிறிதாக வெட்டவும்.தோல் நீக்கி வேக வைத்த

பீட்ரூட்டை மெல்லிய நீட்டு குச்சிகளாக வெட்டவும். முளைவிட்ட

பாசிப்பயறை லேசாக ஆவியில் வேக வைத்து எடுத்து ஆற விடவும். ஒரு பெரிய கண்ணாடி பாத்திரத்தில் ஆவியில் வேக வைத்து ஆற விட்ட முளை கட்டிய பச்சைப்பயறு, வெட்டிய வெங்காயம்,பச்சை மிளகாய், சிறிதாக வெட்டிய இஞ்சி அவித்து வெட்டி வைத்துள்ள சீனிக்கிழங்கு , அவித்த வேர்க்கடலை, மாங்காய் துருவல், கரட் துருவல், செத்தல் மிளகாய் வெட்டுத்துகள், எலுமிச்சை சாறு மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாக கலந்து மேலால் தோல் நீக்கி அவித்து மெல்லியதாக வெட்டி வைத்திருக்கும் பீட்ரூட்டைத் தூவி அலங்கரித்துப் பரிமாறவும்.

மனசை பக்குவப்படுத்தினால் எல்லா உணவுகளையும் சாப்பிட பழகி விடலாம்.

சஞ்சாரி



# தொப்பையை வீரத்தின் அடையாளமாக கருதும் போடி இன மக்கள்!

## கேயல் புதுவருட கொண்டாட்டத்தில் தொப்பை வளர்க்கும் போட்டி!



சோபிகா கிருஷ்ணமூர்த்தி

**பழங்குடியின** மக்களிடம் பாரம்பரிய வழிபாடுகள் இருப்பது வழமையாக இருப்பினும் திருமணமாகாத ஆண்கள் தொப்பை வளர்ப்பைப் பாரம்பரிய பழக்கமாக கடைபிடிப்பதுடன், அவர்களையே பெண்களும் மணம் முடிக்க விரும்புவதும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அந்த விநோத பழக்கத்தினை எத்தியோப்பியாவின் போடி பழங்குடியினர் கடைபிடிக்கின்றனர். அதிக தொப்பையை உடைய ஆண்களையே அந்த பழங்குடியினர் இனத்தின் வீரராகவும் சிறப்பிக்கின்றனர்.

போடி பழங்குடியினர் தென்கிழக்கு எத்தியோப்பியாவில் உள்ள ஓமா பள்ளத்தாக்கு பகுதியில் வசிப்பதுடன் ஓமா நதிக்கரையில் விவசாயம் செய்தும் கால்நடை மேய்ச்சல் நடத்தியும் வாழ்ந்துவருகின்றனர்.

இவர்கள் கேயல் எனப்படும் விழாவைச் சந்திர புத்தாண்டு காலத்தில் கொண்டாடுகின்றனர்.இந்த விழாவில் அந்த இனத்தைச் சேர்ந்த திருமணமாகாத ஆண்களிடையே நடத்தப்படும் தொப்பை வளர்க்கும் போட்டியில் யார் அதிகமாகத் தொப்பை வளர்க்கிறாரோ அவரே இனத்தில் ஹீரோவாக சிறப்பிக்கப்படுவார்.

அதற்காக அந்த விழா தொடங்குவதற்கு 6 மாதங்களுக்கு முன்னரே திருமணமாகாத ஆண்கள் இனத்தை விட்டு வெளியேறி தனிமையில் தங்கி தயாராகுவார்கள். அந்த காலப்பகுதியில் வெறும் ரத்தம் மற்றும் பாலை மட்டுமே குடிக்க வேண்டும்.



இந்த வழிமுறையானது 4 போடி இனக்கிராமங்களில் நடத்தப்படுவதோடு போட்டியில் பங்கேற்கவுள்ள ஆண்கள் அனைவரும் கூடி, அந்த இனத்திற்கான புனித மரத்தைச் சுற்றி ஓடுவர்.


அதிக எடைக் காரணத்தினால் அவர்களால் நடக்க இயலாத நிலையில், பெண்கள் அவர்களுக்கு நீர், உத்வேகம் தரும் பாணம் போன்றவற்றைக் கொடுத்து மரத்தைச் சுற்றி முடிக்க உதவி செய்வார்கள்.

இந்த போட்டியில் பங்கேற்ற ஆண்களில் அதிக எடைக் கொண்டவர்கள் தேர்வு செய்யப்பட்டு சிறப்பிக்கப்படுவதுடன், அவர்களையே மணம் முடிக்க பெண்களும் விரும்புகின்றனர். இந்த விழாவின் போது ஆண்களைக் தம் பக்கம் இழுக்க பெண்களும் தம்மை அலங்கரித்து பங்கேற்று கொள்வார்கள்.




© Eric Lafforgue

# நடிகர் திலகத்தோடு ஒரு பயணம்...



## சிவாஜி கணேசன் குறித்த நூல் யாழ். பல்கலையில் அறிமுகம்

23.04.2023

### ராம்குமார் கணேசனும் கலந்துகொள்கிறார்

### அழைத்து செல்கிறார் முனைவர். கா.வெ.சே மருதுமோகன்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் குறித்து தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் முனைவர் மருதுமோகன், சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து எழுதிய சிவாஜி கணேசன் எனும் நூலின் அறிமுக விழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது.

நடிகர் திலகத்தின் மகன் ராம்குமார் கணேசன் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவதற்காக வருகைதருகின்றார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி



ஊடக அனுசரணை



பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து நீங்கா நினைவில் சிவாஜி என்ற தலைப்பில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின் சிறப்புரை இடம்பெறும்.

நூலாசிரியர் அறிமுகத்தை சிவா பிள்ளை நிகழ்த்த, நூல் அறிமுக உரையை முனைவர் கா.வெ.செ.மருதுமோகன் நிகழ்த்துவார். யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா நூலை வெளியிடுவார். ராம்குமார் சிவாஜி கணேசன் பிரதிகளைக் கையளிப்பார்.

முனைவர் கோ.சகாதேவி, முத்தையாபிள்ளை சிறிகாந்த், தேவராயபிள்ளை லெட்சுமணன்ராஜ், டாக்டர் சதீஸ்குமார் சிவலிங்கம், முனைவர் மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவார்கள்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக இலங்கை, இந்திய பேச்சாளர்கள் பங்குகொள்ளும் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறும். செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலி லவீசன் இதற்குத் தலைமைதாங்குவார். இதனைவிட கலை கலாசார நிகழ்வுகளும், காட்சிப்படுத்தல்களும் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் பொதுமக்களை அழைக்கின்றார்கள்.



# நடிகர் திலகத்தோடு ஒரு பயணம்...







**ஊடக அனுசரணை**

# நியூசிலாந்தில் வந்துதித்த இராமன்!



தமிழ் நியூசிலாந்து நடனப் பள்ளியின் வருடாந்த நாட்டிய நாடகம் நிகழ்ச்சி எதிர்வரும் ஏப்ரல் 22ம் திகதி மேற்கு ஆக்லாந்தில் நடைபெறவுள்ளது.

வந்துதித்த இராமன் என்னும் தலைப்பில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியில் இலங்கை, இந்தியா, மலேசியா, பிஜி போன்ற பல நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட சிறார்கள் கலந்து கொள்கின்றனர். அதிலே கணிசமான எண்ணிக்கையானோர் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்றைய நிகழ்ச்சியில் சமூகத் தலைவர்கள், அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ் நியூசிலாந்து நடனப் பள்ளியை இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட அம்பிகா சிற்சபேசன் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


**தமிழ் நியூசிலாந்து நடனப்பள்ளியின் இயக்குனர் அம்பிகா சிற்சபேசன் தனது மாணவர்களுடன் இணைந்து பெருமையுடன் வழங்கும்.**











ஊடக அனுசரணை

தமிழருவி Tamilaruvi weekly | தமிழருவி Tv tamilaruvi TV

tamilaruvi24 insta-tamilaruvi_24 aruvitamil812@gmail.com 0094 768 320 733

# தேசியகட்சிகள்... மாநிலக்கட்சிகள்!

நமது நாட்டின் ஜனநாயக முறையில் பல கட்சிகள் செயல்படுகின்றன. அவை தேசிய கட்சிகள் என்றும் மாநில கட்சிகள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு வகைப்படுத்தி அங்கீகாரம் அளிப்பது தேர்தல் ஆணையத்தின் பணியாக உள்ளது.

இவ்வாறு வகைப்படுத்துவதற்கான அளவுகோலாக அதற்கு முன் நடைபெற்ற தேர்தல்களில் கட்சிகள் பெற்ற வாக்குகள் அடிப்படையாக உள்ளன.

தேசிய கட்சியாக அங்கீகாரம் பெற நான்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் ஒரு கட்சி போட்டியிட்டு, குறைந்தபட்சம் 6 சதவீதம் வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். அல்லது மக்களவைத் தேர்தலில் மூன்று மாநிலங்களில் போட்டியிட்டு 2 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**மாநிலக் கடசியாக அங்கீகாரம் பெற கடைசியாக நடைபெற்ற மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் 6 சதவீத வாக்குகளைப் பெற்று 2 சட்டப் பேரவை உறுப்பினர்களைப் பெற்றிருக்க வேண்டும். அல்லது மொத்த சட்டமன்றத் தொகுதிகளில் 3 சதவீத தொகுதிகளில் வென்றிருக்க வேண்டும்.**



## தமிழக முற்றம்

மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற கடைசியாக நடைபெற்ற மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் 6 சதவீத வாக்குகளைப் பெற்று 2 சட்டப் பேரவை உறுப்பினர்களைப் பெற்றிருக்க வேண்டும். அல்லது மொத்த சட்டமன்றத் தொகுதிகளில் 3 சதவீத தொகுதிகளில் வென்றிருக்க வேண்டும். அல்லது கடைசியாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் ஏதாவது ஒரு மாநிலத்தில் 6 சதவீத வாக்குகளைப் பெற்று 1 நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றிருக்க வேண்டும்.

கடந்த 2014 மற்றும் 2019 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்கள், 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு 21 மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் இந்திய தேர்தல் ஆணையம் கட்சிகளை தேசிய கட்சிகள், மாநிலக் கட்சிகள் என்று வகைப்படுத்தி உள்ளது.

அதன்படி, பா.ஜ.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, தேசிய மக்கள் கட்சி (சங்மா), ஆம் ஆத்மி கட்சி ஆகியவை தேசிய கட்சிகளாக அங்கீகாரம் பெற்றுள்ளன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, திரிணமூல் காங்கிரஸ் (மே.வங்கம்), தேசியவாத காங்கிரஸ் (மகாராஷ்டிரம்) ஆகியவை தேசிய கட்சி என்ற தகுதியை இழந்து விட்டன. மாநிலக் கட்சியாக இருந்த ஆம் ஆத்மி கட்சி தேசிய கட்சியாகத் தகுதி பெற்றுள்ளது. பாரத ராஷ்டிர சமிதி (ஆந்திர பிரதேசம்), ராஷ்ட்ரீய லோக் தளம் (உத்தரபிரதேசம் ), புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி ( மே.வங்கம்), பாமக (புதுச்சேரி) ஆகியவை மாநிலக் கட்சி என்ற தகுதியை இழந்துவிட்டன.



கே.எஸ். இராதாகிருஷ்ணன்

---

## அணில் தோப்பு

குழந்தைகள் தமிழருவி மடிசாயும் கதை நேரம்

# தாய் சொல்லை தட்டாதே

அஞ்சலி



குணவ் வீட்டு தோட்டத்தில் சிவப்பு கொய்யா மரம், தித்திக்கும் சுவை மிகுந்த சப்போட்டா மரம், நாட்டு பப்பாளி மரம், வாழை மரம் மற்றும் நெடுநீண்ட தென்னை மரங்களும் உள்ளன.

குணவ் தன் அம்மாவுடன் கொய்யா பழங்களைப் பறித்துக் கொண்டு இருந்தான். அப்போது தென்னை மரத்தின் அடியில் கீழே விழுந்த குரம்பையை எடுத்து, அம்மா இங்க பாருங்க இந்த குட்டி தேங்காய் கீழ விழுந்து , ஓட்டையாகி தண்ணி எல்லாம் சிந்தீர்ச்சு போல அம்மா.

அம்மா, சிரிச்சுக்கிட்டே, உனக்கு இந்த குரம்பை எப்படி கீழ விழுந்துசு, தண்ணீர் எங்க போச்சுனு தெரிஞ்சுக்கனுமா?

ஆமா அம்மா ஆமா ஆமா...

அதுக்கு ஒரு கதை சொல்லுறேன் கேளு.

தென்னை மரத்தில் தான் அந்து என்ற குட்டி அணில் தன் பெற்றோருடன் வசித்து வருகிறது. அந்து மிகவும் சுட்டி, எப்போதும் கேள்விகள் கேட்டு கொண்டே இருப்பான். அந்துவின் அம்மா, அந்து வீட்டிலேயே இருக்க வேண்டும். மரத்தில் உள்ள காய்களைப் பறிக்கவோ, கீழே வரவோ முயற்சி செய்ய கூடாது. நானும் அப்பாவும் சீக்கிரமாக உணவு கொண்டு வந்து விடுவோம்.

அந்து, ஏன் எப்ப பாரு இதையே சொல்லுறிங்க. நீ சிறுவனாக இருப்பதால், உனக்கு இன்னும் எது சரி? எது தவறு? என்று தெரியாது. அதனால் தான் உன்னிடம் தினமும் கூறுகிறேன். சரி சரி நான் எங்கும் செல்லமாட்டேன். நீங்க போயிட்டு சீக்கிரமாக வந்துருங்க.

அந்து சிறிது நேரம் அமைதியாக வீட்டிலேயே இருந்தான். அந்து தன் வீட்டின் அருகில் உள்ள தென்னை மர காய்களை உற்று பார்த்துக் கொண்டு இருந்தான்.

ஆஹா என்னது போன வாரம் இந்த காயைப் பார்க்கும் போது சிறியதாக இருந்தது இன்று சற்றே பெரியதாக உள்ளது. காயைப் பார்க்க பார்க்க டேஸ்ட் பண்ணி பாக்கனும் போலவே இருக்கே.

அம்மா வேற எங்கேயும் போக கூடாது சொன்னாங்க என்ன பண்ணலாம்? ...

அம்மா அப்படிதா சொல்லுவாங்க நான் பெரிய பையன் தா என்று கூறிக்கொண்டே, அந்த குரும்பை காயின் அருகில் சென்று கடிக்க தொடங்கினான். ஆஹா ஆஹா என்ன இது இவ்வளவு கஷ்டமா இருக்கு, என்னோட பல்லே வலிக்குது. இ.. ஆ... னு சொல்லிகிட்டே அந்த குறம்பையை ஒரு வழியா கடிச்சு ஓட்ட போட்டுருச்சு.

ஐய்யா.... ஓட்ட போட்டுட்டேன். இப்போ உறிஞ்சி குடிக்கலானு சொல்லிக்கிட்டே உரிச்சுனு உறிஞ்சு. ஐய்ய... என்னது இது நல்லாவே இல்ல.

அந்துவின் அப்பாவும் அம்மாவும் உணவு கொண்டு வந்துட்டாங்க.

அந்துவின் அப்பா, அந்து இது குறம்பை. இதுல இருக்க தண்ணீரை குடிச்சா நல்லா இருக்காது. இது பெரியதாகி இளநீராக இருக்கும் போது குடித்தால் தான் டேஸ்டா இருக்கும்.

ஆமா, அப்பா நேத்து நீங்க குடிக்க சொன்ன இளநீர் தா, ரொம்ப டேஸ்டா இருந்துசு. இந்த குறம்பை தண்ணீர் நல்லவே இல்ல.

அம்மா அம்மா..


என்ன அந்து?

என்னோட பல்லு வலிக்குது அம்மா,

உன்னோட பல் இன்னும் கடிக்கும் அளவிற்கு வலு பெறவில்லை. இதுக்குதான் அம்மா உன்னை வீட்டிலேயே இருக்க சொன்ன, இப்போ உனக்கு தான வலிக்குது.

அந்து , அம்மா என்னை மனிச்சுருங்க, இனிமே நீங்க சொல்லுறதக் கேட்டு நடத்துகிறேன்.

கதையைக் கேட்டு கொண்டு இருந்த குணவ், அம்மா அதுனால நீங்க கொய்யா காய் பறிக்க வேண்டாம்னு சொன்னிங்கலாமா?



ஆமா குணவ், காய்களை விட பழங்கள் தா ரொம்ப சுவையாக இருக்கும். சரி அம்மா..

என்ன குட்டீஸ் நீங்களும் அம்மா அப்பா சொல்லுறத கேட்டு நடந்துகிறிங்களா?



# சோழர் வரலாறு மட்டுமா தமிழர் அடையாளம்?

## சர்ச்சை கிளப்பும் யாத்திசை படம் போஸ்டர்!



**பொன்னியின் செல்வன்**

மணிரத்னம் இயக்கத்தில் பல முன்னணி நடிகர்கள் நடிப்பில் பொன்னியின் செல்வன் திரைப்படம் வெளியானது.

சோழர் வரலாறு கதையை மையமாக வைத்து இப்படம் உருவாக்கப்பட்டது. இதில் பாண்டியர்கள் வரலாற்றை தவறாக சித்தரிக்க பட்டதாக சிலர் விமர்சங்கள் முன் வைத்தனர்.

**யாத்திசை**

இந்நிலையில் பாண்டியன் வரலாற்றை வைத்து யாத்திசை என்ற திரைப்படம் உருவாகியுள்ளது. இப்படமும் பொன்னியின் செல்வன் 2 வெளியாகும் அதே தினத்தில் வெளியாகும் என சொல்லப்படுகிறது.




யாத்திசை படத்தின் போஸ்டரில் சோழர் வரலாறும் மட்டுமா தமிழர் அடையாளம் என்று குறிப்பிட்டுள்ளது.

தற்போது இந்த போஸ்டர் சமூக ஊடகங்களில் பக்கத்தில் வேகமாக பரவி வருகிறது.

# உதயநிதியுடன் மோதும் நடிகர் சிவகார்த்திகேயன்



மண்டேலா படத்தின் இயக்குனர் மடோன் அஸ்வின் சிவகார்த்திகேயன் வைத்து மாவீரன் படத்தை இயக்கி வருகிறார். இதில் அதிதி ஷங்கர் கதாநாயகியாக நடிக்கிறார்.

சிவகார்த்திகேயனின் பிரின்ஸ் திரைப்படம் படும் தோல்வியை சந்தித்த பிறகு மாவீரன் படத்தின் மூலம் மீண்டும் நடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாரி செல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி நடிப்பில் மாமன்னன் திரைப்படம் உருவாகியுள்ளது. இப்படம் தான் உதயநிதியின் கடைசி படமாக இருக்கும் என்று கூறினார்.

இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்நிலையில் உதயநிதியின் மாமன்னன் படமும் சிவகார்த்திகேயனின் மாவீரன் ஒரே நாளில் படமும் ஜூன் மாதம் 29 வெளியாகும் என கூறப்படுகிறது.

# தேன் நிலவில் ஸ்னேகா போட்ட நிபந்தனை என்ன தெரியுமா?





தமிழ் சினிமாவில் நட்சத்திர ஜோடியாக வலம் வருபவர்கள் ஸ்னேகா மற்றும் பிரசன்னா. காதலித்து வந்த அவர்கள் இருவரும் 2012ல் திருமணம் செய்து கொண்டனர்.

அவர்களுக்கு தற்போது ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருக்கின்றனர்.

திருமணத்திற்கு பிறகு சினேகா மற்றும் பிரசன்னா இருவரும் நியூசிலாந்துக்கு தேன் நிலவு சென்று இருக்கின்றனர். அங்கு குஷி பட விஜய் போல புங்க ஜூம்பிங் செய்ய வேண்டும் என பிரன்னா கேட்டாராம்.

என் பெயரை பச்சை குத்தினால் புங்க ஜூம்பிங் செய்ய ஒப்புக்கொள்வதாக தேன் நிலவில் ஸ்னேகா நிபந்தனை போட்டிருக்கிறார்.

அதை கேட்டு உடனே பிரசன்னா அங்கிருந்த கடையில் பச்சை குத்தி கொண்டாராம்.

அதன் பிறகு தான் பிரசன்னா மற்றும் சினேகா இருவரும் ஜோடியாக புங்க ஜூம்பிங்கில் குதித்து இருக்கின்றனர்.

# சூப்பர் ஸ்டாருடன் ஐ.பி.எல். போட்டியை பார்த்த தனுஷ்!



தனுஷ் தற்போது ரஜினி மகளை விவாகரத்து செய்துவிட்ட நிலையில் முழுநேரமாக சினிமாவில் தான் கவனம் செலுத்தி வருகிறார். பல வருடங்களுக்கு பிறகு வ்உண்டர்பர் நிறுவனம் மூலமாக மீண்டும் அவர் படம் தயாரிக்க போகிறார். மாரி செல்வராஜ் இயக்கத்தில் உருவாகும் அந்த படம் பற்றிய அறிவிப்பு சமீபத்தில் வெளிவந்தது.

தனுஷ் தற்போது நடித்து வரும் கேப்டன் மில்லர் படத்திற்காக நீண்ட தாடி வைத்து இருக்கிறார். அதே தோற்றத்தில் தான் அவர் பட விழாக்களிலும் கலந்துகொண்டு வருகிறார்.

இந்நிலையில் நேற்று நடந்த சென்னை மற்றும் பெங்களூர் ஐபிஎல் போட்டியை நேரில் காண தனுஷ் மைதானத்துக்கு வந்திருக்கிறார்.

அவர் அருகில் கன்னட சூப்பர்ஸ்டார் சிவராஜ்குமார் தான் அமர்ந்து இருக்கிறார். அந்த போட்டோ தற்போது வைரல் ஆகி வருகிறது. கேப்டன் மில்லர் படத்தில் தனுஷ் உடன் அவரும் நடித்து இருக்கிறார்.

மேலும் தற்போது ரஜினிகாந்த் நடித்து வரும் ஜெயிலர் படத்திலும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் சிவராஜ்குமார் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குஷ்பூ வாழ்வில் வரவில்லை என்றால் நான் இந்த நடிகையை காதலித்து இருப்பேன்!

## மனம்திறக்கிறார் சுந்தர்.சி

இயக்குனராகவும் நடிகராகவும் பல வெற்றி படங்கள் கொடுத்தவர் சுந்தர்.சி. அவர் நடிகை குஷ்பூவை காதலித்து 2000ல் திருமணம் செய்து கொண்டார்.

அவர்களுக்கு இரண்டு மகள்கள் இருக்கின்றனர். தற்போதும் சுந்தர்.சி பல படங்கள் இயக்கி வருகிறார். அதே நேரத்தில் குஷ்பூ அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். முன்பு நிகழ்ச்சி ஒன்றில் பேசிய சுந்தர் சி, தனது வாழ்க்கையில் குஷ்பூ மட்டும் வரவில்லை என்றால் நிச்சயம் நடிகை செளந்தர்யாவிடம் காதலை சொல்லி இருப்பேன் என கூறி இருக்கிறார்.

மேலும் பேசிய அவர் ‘எனக்கு மிகவும் பிடித்த இரண்டு நடிகைகளில் செளந்தர்யாவும் ஒருவர். குஷ்பூ என்னுடைய வாழ்க்கையில் வராத பட்சத்தில் நான் செளந்தர்யாவிடம் காதலை சொல்லி இருப்பேன். ரொம்ப நல்ல பெண் அவர். அப்படி ஒருவரை பார்ப்பதே அரிது’ என சுந்தர்.சி கூறி இருக்கிறார்.





தமிழருவி கொட்டகை
Tamilaruvi Talkies




# அவள் தானே



தனிமையில்
உண்டாகின்ற
கோபங்களை
யாருடனோ ஏற்படுகின்ற
மனக்கசப்புக்களை
அவளிடம்தானே
கொட்டித்தீர்க்க
முடிகின்றது...!

ஏதோ ஒரு தருணத்தில்
உண்டாகின்ற
அதிஷ்டத்தை
ஏதோ ஒரு தருணத்தில்
விட்டு தொலைகின்ற
துரதிஷ்டத்தை
அவளிடம்தானே
முறையிட முடிகின்றது...!

சின்ன பொருள்
காணாமல் போனாலும்
பெரிதாய் வலி
உண்டானாலும்
அவளைத்தானே
தேட முடிகின்றது...!

ஏதோவொன்றை
தேடி ஓடிக்கொண்டிருந்த
வேளையிலும்
அதுவே வந்து கைகூடிய
வேளையிலும்
அவள்தானே
நெஞ்சம் எல்லாம்
நிறைந்திருக்கிறாள்...!

அதனாலோ என்னவோ
இன்னும் இன்னும்
அதிகமாக
அம்மா உன்னைத்
தேடிக்கொள்கிறது மனது...!

**அஸ்வினி வையந்தி**



# தாரகம்

ஓங்கி நிற்கும்
தாகந் தணிக்க
ஒரு மிடறுக்கு
நீருக்கு அவாவுறும் தருணம்
அருகே பரந்து விரிந்த
நீலக் கடல் தான்
கண் முன் தெரிகிறது
ஊற்றெடுக்கும்
உமிழ் நீர் போல் தாகந் தணிக்க
இயலாத தண்ணீராய் அவை காண்
கையில்
கண்ணீரையும் அவள்
கண்கள் உதிர்க்கின்றன
ஆனால் அது கூட அவள் உதடு
நனைக்காது கண்ணருகில் நின்று
தான் வேடிக்கை பார்க்கின்றது.



**(குகதா)
டக்ஸனா
கிருஷ்ணானந்தன்**



# புல்லாங் குழல்

என்னை சிறைபிடித்த
உன் காதலை, என் இதய
உணர்வுக்கு தவமாக்கி..!

என்னை யாசகம்
கேட்க்கும் உன் கண்ணீர்
துளிகளுக்கு,என்னையே
உன் வரமாக்கி..!

என்னை சேர துடிக்கும்
உன் மூச்சு காற்றோடு
காற்றாய் கலந்தாட..!

என் சுவாச காற்றை புல்லாங்
குழலுக்கு இசையாக்கி, நின்
பூரண மதிக்கு, நானே உன்
ஆத்ம ஒளியானேன்..!

**- போகர் அதோமுகன்**



# தீட்டு ஓர் சாட்டு

தீட்டு ஓர் சாட்டு
தாய்மை அறியா
மூடர்கள் செய்யும்
கொடுமையின் பாட்டு

அறியாமை வாசலில்
நுழைகின்ற மனிதன்
பெருமைக்கு சொல்லும்
அறியாமைச் சாட்டு

கடவுளைச் சொல்லியே
பதவிக்காக வாழும்
மனிதர்கள் செய்யும்
ஆணவச் சாட்டு

தீமைகள் செய்பவனை
கடவுளாய் மதித்து
எளிமையின் உருவங்களை
விலக்கிடச் சாட்டு

வீரத்தின் பெண்ணவளை
தீட்டென்று சாட்டை
சொல்லிடும் நீயே

சமூகத்தில் தீட்டு
இறந்தவன் வீட்டில்
தீட்டு என்றால்
வாழ்வது யாருமில்லை
பூமியில் அறிவாயா

பிறந்தாலும் சாட்டு
தீட்டு என்றே
தீமைகள் செய்யும்
மனிதரின் மடமை

மனிதத்தை மதிக்கிறேன்
மனிதர்களை வெறுக்கிறேன்
மனங்களை கேளுங்கள்
எங்கே தீட்டென்று

உன்னிலும் தீட்டு
என்னிலும் தீட்டு
பிறகு எதற்கு
ஒரு சாட்டு

உணருங்கள் நீங்களும்
தீட்டு என்றே
சாட்டை நீக்கு
மனிதம் வாழட்டும்

மண்ணுக்கே சொந்தம்
மனிதர்கள் உடலும்
இதற்கு ஏனோ
தீட்டெனும் சாட்டு

மனிதா உணர்ந்திடு
பழமையை தகர்த்தெறி
தீட்டெனும் சாட்டை
குப்பையில் புதைத்திடு

மனிதம் வாழட்டும்
மனங்களில் மாற்றம்
இன்றே பிறக்கட்டும்
இன்றே புறப்படு



**பாரதி மைந்தன் ( முல்லைத்தீவு)**

# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....

